பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி – சென்னை – 4

24 04 2018 6 45 செவ்வாய்கிழமை காலை

மாநில செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. தேசிய பஞ்சாயத்ராஜ் தினத்தை ஒட்டி, தேசிய கிராம சுயாட்சி திட்டத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று தொடங்கி வைக்கிறார்.

<><><><><>

2. ராணுவத்தினருக்கான வீர, தீர செயல்களுக்கான விருதுகளை குடியரசுத் தலைவர் திரு. ராம் நாத் கோவிந்த் வழங்கினார்.

<><><><><>

3. விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு மானிய விலையில் கோதுமை மற்றும் அரிசி வழங்கப்படும் என மத்திய உணவு அமைச்சர் திரு. ராம்விலாஸ் பாஸ்வான் தெரிவித்துள்ளார்.

<><><><><>

4. கூடங்குளம் அணு உலை அதிநவீன பாதுகாப்பு அம்சங்களைக் கொண்டது என இந்திய அணுசக்திக் கழகம் உச்சநீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

<><><><><>

5. புதுதில்லியில் நடைபெற்ற ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் தில்லி அணியை 4 ரன் வித்தியாசத்தில் வீழ்த்தி பஞ்சாப் அணி வெற்றி பெற்றுள்ளது.

*---- இனி விரிவான செய்திகள் ----*

தேசிய பஞ்சாயத்ராஜ் தினம் நாடு முழுவதும் இன்று கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி, மத்தியப்பிரதேச மாநிலம் மான்ட்லா மாவட்டத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில், பிரதமர் திரு.நரேந்திர மோடி கலந்து கொண்டு தேசிய கிராம சுயாட்சி திட்டத்தை தொடங்கி வைக்கிறார்.

கிராமப்புறங்களில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் மின்னணு ஆளுகைக்கான முயற்சிகளை விரைவுபடுத்துதல், மற்றும் பல்வேறு பயிற்சிகளை வழங்க இத்திட்டம் வகை செய்கிறது.

கிடைக்கும் வளங்களை முழுமையாகப் பயன்படுத்தி நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை அடையவும் இத்திட்டம் உதவும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பழங்குடியின மக்களின் ஒட்டுமொத்த மேம்பாட்டிற்காக அடுத்த ஐந்தாண்டுகளில் செயல்படுத்தப்படவுள்ள திட்டங்களையும் இந்த நிகழ்ச்சியில் பிரதமர் வெளியிடவுள்ளார்.

மேலும் மான்ட்லா மாவட்டம் மானேரியில் சமையல் எரிவாயு நிரப்பும் ஆலைக்கும் அவர் அடிக்கல் நாட்டுகிறார்.

அத்துடன் 100 சதவீத புகையில்லா சமையலறைகள், இந்திர தனுஷ் இயக்கத்தின் கீழ் 100 சதவீத தடுப்பூசி மற்றும் சௌபாக்யா திட்டத்தின் கீழ் 100 சதவீத மின்சார வசதி பெற்ற கிராமங்களின் தலைவர்களையும் பிரதமர், கௌரவிக்கவுள்ளார்.

<><><><><>

ராணுவத்தினருக்கான வீர, தீர செயல்களுக்கான விருதுகளை குடியரசுத் தலைவர் திரு. ராம் நாத் கோவிந்த் வழங்கினார்.

குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், மேஜர் ப்ரீத்தம் சிங் குன்வர் உள்ளிட்ட 3 பேருக்கு கீர்த்தி சக்ரா விருதும், சவுரிய சக்ரா விருது 13 பேருக்கும் வழங்கப்பட்டது.

இதுதவிர பரம் விசிஷ்ட் சேவா பதக்கம், உத்தம் யுத்தசேவா பதக்கம், அதிவிசிஷ்ட் சேவா பதக்கம், விசிஷ்ட் சேவா பதக்கங்களையும் குடியரசுத் தலைவர் வழங்கினார்.

<><><><><>

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டத்தில் பங்கேற்பதற்காக, பாதுகாப்பு அமைச்சர் திருமதி. நிர்மலா சீத்தாராமன் சீனா சென்றுள்ளார்.

பெய்ஜிங்கில் இன்று நடைபெறும் இந்தக் கூட்டத்தின் இடையே சீனாவின் பல்வேறு தலைவர்களையும் சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து அவர் பேச்சு நடத்தவுள்ளார்.

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சி மாநாடு சீனாவின் **Qingdao** நகரில் வரும் ஜூன் மாதம் நடைபெறுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

<><><><><>

நாடு முழுவதும் உள்ள விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு மாதந்தோறும் 15 கிலோ கோதுமை மற்றும் அரிசி மானிய விலையில் வழங்கப்படும் என மத்திய உணவுத்துறை அமைச்சர் திரு. ராம்விலாஸ் பாஸ்வான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கோதுமை ஒரு கிலோ 4 ரூபாய் 15 காசுக்கும், அரிசி ஒரு கிலோ 5 ரூபாய் 65 காசுக்கும் வழங்கப்படும் என்றார்.

இதன் மூலம் ஷெட்யூல்டு வகுப்பு, பழங்குடியின மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த சுமார் ஒரு கோடி மாணவர்கள் பயன்பெறுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

<><><><><>

பிஜேபி ஆட்சியில் பத்திரிக்கையாளர்களின் குரல் ஒடுக்கப்படுவதாகவும், காங்கிரஸ் கட்சி அவர்களைப் பாதுகாக்கும் என்றும் காங்கிரஸ் தலைவர் திரு. ராகுல் காந்தி கூறியுள்ளார்.

புதுதில்லியில் காங்கிரஸ் கட்சி சார்பில் மேற்கொள்ளப்படும் "அரசியல் சாசனத்தை பாதுகாப்போம்" என்ற இயக்கத்தை தொடங்கி வைத்துப் பேசிய அவர், தற்போதைய ஆட்சியில்

அரசியல் சாசன அமைப்புகள் மற்றும் தலித் மக்கள், பெண்களுக்கு எதிரான நடவடிக்கைகள் அதிகரித்து விட்டதாக குறிப்பிட்டார்.

ஆனால் பிரதமர் திரு. நரேந்திர மோடி இந்தப் பிரச்னைகளுக்கு தீர்வுகாணாமல் மீண்டும் பிரதமர் ஆவதிலேயே கவனம் செலுத்தி வருவதாகவும் ராகுல் காந்தி தெரிவித்தார்.

<><><><><>

வாரிசு அரசியலை பாதுகாப்பதில்தான் காங்கிரஸ் கட்சி கவனத்துடன் இருப்பதாகவும், அரசியல் சாசன அமைப்புகளை தரம் தாழ்த்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் பிஜேபி தலைவர் திரு. அமீத் ஷா குற்றம் சாட்டியுள்ளார்.

உச்சநீதிமன்ற தலைமை நீதிபதிக்கு எதிராக மாநிலங்களவையில் பதவி நீக்கத் தீர்மானம் கொண்டு வருவதற்கான நோட்டீஸ் கொடுக்கப்பட்டதுடன், நாடாளுமன்றத்தையும் செயல்படவிடாமல் காங்கிரஸ் கட்சி முடக்கிவிட்டதாக திரு. அமீத் ஷா கூறியுள்ளார்.

மேலும் அரசியல் சாசன சிற்பி அண்ணல் அம்பேத்கரின் புகழை மறைப்பதிலும் காங்கிரஸ் காட்சி கவனம் செலுத்துவதாக அமீத் ஷா தெரிவித்துள்ளார்.

<><><><><>

மத்திய அரசுக்கு எதிராக ஒத்த கருத்துடைய, மதச்சார்பற்ற ஜனநாயக சக்திகளை ஓரணியில் திரட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக, இந்திய கம்யூனிஸ்ட் பொதுச் செயலாளர் திரு. சுதாகர் ரெட்டி தெரிவித்துள்ளார்.

கோவையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மத்தியில் ஆளும் பிஜேபி அரசு, தலித் மற்றும் சிறுபான்மை மக்களுக்கு விரோதமாக செயல்படுவதாகக் கூறினார்.

மத்திய அரசின் இதுபோன்ற நடவடிக்கைகளிலிருந்து நாட்டை பாதுகாக்க ஒன்றுபட்ட போராட்டம் தேவை என்று குறிப்பிட்ட சுதாகர் ரெட்டி, கேரள மாநிலம் கொல்லத்தில் நடைபெறவுள்ள இந்திய கம்யூனிஸ்ட் தேசிய மாநாட்டில் இதற்கான செயல்திட்டம் வகுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

பிராந்திய கட்சிகள் வலுவாக உள்ள தமிழகம் போன்ற மாநிலங்களில் அந்தக் கட்சிகளுடனும், தேசிய அளவில் காங்கிரஸ் போன்ற கட்சிகளுடனும் ஒருங்கிணைந்து செயல்படவிருப்பதாக அவர் கூறினார்.

<><><><><>

கூடங்குளம் அணுஉலை, அதிநவீன பாதுகாப்பு அம்சங்களைக் கொண்டது என்றும், நிலநடுக்கம் போன்ற பேரிடர்களை தாங்கும் வல்லமை பெற்றது என்றும் இந்திய அணுசக்திக் கழகம் உச்சநீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான வழக்கு நேற்று தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா தலைமையிலான அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தபோது அணுசக்திக் கழகம் சார்பில் ஆஜரான கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா, பயன்படுத்தப்பட்ட அணு எரிபொருளை அப்புறப்படுத்துவது தொடர்பான உச்சநீதிமன்ற உத்தரவை செயல்படுத்த கூடுதல் கால அவகாசம் தேவை என்றார்.

இதையடுத்து, எரிபொருள் அப்புறப்படுத்துவது தொடர்பான பணியின் முன்னேற்றம் குறித்து அறிக்கை தாக்கல் செய்யுமாறு மறு உத்தரவிட்ட நீதிபதிகள் வழக்கு விசாரணையை ஜூலை மாதத்திற்கு ஒத்தி வைத்தனர்.

<><><><><>

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் தொகுதியில் 90 கோடி ரூபாய் செலவில் புதிய கூட்டுக்குடிநீர் திட்டத்தை செயல்படுத்துவது பற்றி மாநில அரசு பரிசீலித்து வருவதாக சமூக நலத்துறை அமைச்சர் திருமதி. வி. சரோஜா தெரிவித்துள்ளார்.

ராசிபுரம் தொகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ராசிபுரம் அரசு மருத்துவமனையில் 40 படுக்கை வசதிகளுடன் கூடிய புதிய பிரிவு ஏற்படுத்தப்படும் என்றார்.

ராசிபுரம் நகராட்சிப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பாதாள சாக்கடைப் பணிகள் ஓரிரு மாதங்களில் முடிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

<><><><><>

பிரதமருக்கு எதிரான தொலைபேசி உரையாடலின் அடிப்படையில், கோவை குண்டுவெடிப்பு வழக்கில் சிறைத்தண்டனை பெற்று விடுதலையான ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோவை குனியமுத்தூர் பகுதியைச் சேர்ந்த அந்த நபர் வாகன ஒப்பந்ததாரர் ஒருவருடன் பேசியதாக கூறப்படும் இந்த உரையாடலின் உண்மை தன்மை குறித்து சிறப்புக் குழுக்களை அமைத்து ஆராய்ந்து வருவதாகவும் அதன் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

<><><><><>

யோகாசன படிப்பில் பட்டயம் பெற்றவர்களுக்கு, பிசியோதெரபி பட்டப்படிப்பு மாணவர் சேர்க்கையில் முன்னுரிமை அளிக்கப்படும் என பல்கலைக்கழக மானியக்குழு அறிவித்துள்ளது.

நுழைவுத்தேர்வில் தேர்ச்சி பெற்று அதிக மதிப்பெண் மற்றும் இதர தகுதிகளை பெற்றுள்ள யோகா பட்டயதாரர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென நிபுணர் குழு அளித்த பரிந்துரையை மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சகம் ஏற்றுக்கொண்டதை அடுத்து இம்முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாணவர் சேர்க்கையின்போது நிபுணர் குழுவின் அனைத்து பரிந்துரைகளையும் செயல்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பல்கலைக்கழகங்களைக் கேட்டுக் கொண்டுள்ள பல்கலைக்கழக மானியக்குழு, இது தொடர்பாக உறுப்பு கல்லூரிகளை அறிவுறுத்துமாறும் தெரிவித்துள்ளது.

<><><><><><>

நெல்லை மாவட்டம் கலிங்கப்பட்டியைச் சேர்ந்த ராணுவ வீரர் செல்வகுமார், அருணாசலப்பிரதேச மாநிலத்தில் ஏற்பட்ட வாகன விபத்தில் உயிரிழந்தார்.

செல்வகுமார் உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட ராணுவ வீரர்கள் சென்ற வாகனம், ஆற்றில் கவிழ்ந்ததில் இந்த விபத்து நேரிட்டதாக கூறப்படுகிறது.

அவரது உடல் நாளை சொந்த ஊருக்கு கொண்டுவரப்படவுள்ளது.

<><><><><><>

கோடை சீசனை ஒட்டி உதகை வரும் சுற்றுலா பயணிகளின் வசதிக்காக சிறப்பு சுற்றுப்பேருந்து சேவையை அரசு போக்குவரத்துக்கழகம் தொடங்கியுள்ளது.

உதகை அரசு தாவரவியல் பூங்கா, படகு இல்லம், தொட்டபெட்டா காட்சிமுனை உள்ளிட்ட சுற்றுலா தளங்களை பார்வையிடும் வகையில் இந்தப் பேருந்து இயக்கப்படுகிறது.

இதில் பெரியவர்களுக்கு 100 ரூபாயும் சிறார்களுக்கு 50 ரூபாயும் கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இருவரிச் செய்திகள்

அமெரிக்காவின் புதிய வெளியுறவு அமைச்சராக மைக் போம்பியோவை நியமிக்க அந்நாட்டு நாடாளுமன்றத்தின் செனட் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

<><><><><><>

அமெரிக்க முன்னாள் அதிபர் திரு. ஜார்ஜ் புஷ் திடீர் உடல்நலக்குறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

<><><><><><>

பிரதமர் திரு. நரேந்திர மோடி சீன அதிபர் **Xi Jin Ping**-ஐ Wuhan நகரில் சந்தித்து பேசும்போது, சாதகமான முடிவுகள் எட்டப்படும் என சீனா வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் **Lu Kang** தெரிவித்துள்ளார்.

<><><><><><>

சீனா மற்றும் பாகிஸ்தானுக்கு எதிராக ஒரே நேரத்தில் போர் தொடுக்க இந்திய விமானப்படை தயார் நிலையில் இருப்பதாக விமானப்படை தளபதி பி எஸ் தனோவா கூறியுள்ளார்.

<><><><><><>

கர்நாடக சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்குப்பதிவு நேரத்தை ஒரு மணி நேரம் நீட்டித்து தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. இதன்படி அம்மாநிலத்தில் அடுத்த மாதம் 12ம் தேதி காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை வாக்குப்பதிவு நடைபெறும்.

<><><><><><>

மகாராஷ்ட்டிர மாநிலம் கட்சிரோலி பகுதியில் நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் நக்ஸலைட் தீவிரவாதிகள் 4 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

<><><><><><>

## விளையாட்டுச் செய்திகள்

புதுதில்லியில் நடைபெற்ற ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் தில்லி அணியை 4 ரன் வித்தியாசத்தில் வீழ்த்தி பஞ்சாப் அணி வெற்றி பெற்றுள்ளது.

நேற்றிரவு நடைபெற்ற இப்போட்டியில் முதலில் களம் இறங்கிய பஞ்சாப் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 8 விக்கெட் இழப்பிற்கு 143 ரன் எடுத்தது.

144 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங்கிய தில்லி அணி 20 ஓவரில் 8 விக்கெட் இழப்பிற்கு 139 ரன் மட்டுமே எடுத்து தோல்வியைத் தழுவியது.

<><><><><><>